(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO.208/2017 P.W - 8**

Name : ஆறுமுகம்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 03.11.2022.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கோச்சடை அருகிலுள்ள லாலா சத்திரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் கல்யாணசுந்தரம் என்பவரது தோட்டத்தில் கடந்த 30 வருடங்களாக காவலாளியாக இருந்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக அழகுமலை என்பவர் வாழைநார் உறித்துக் கொண்டிருந்தார். அப்போது மூன்று நபர்கள் மாமரத்திற்கு அருகே மோட்டர் ரூம் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று அழகுமலை என்பவர் என்னை அழைத்தார். நானும், அழகுமலை என்பவரும் மாமரத்தற்கு அருகிலுள்ள மோட்டார் ரூம் சென்று பார்க்கும் போது அடையாளம் தெரியவில்லை. எதிரிகள் ஒருவரை கத்தியை வைத்து குத்தி கல்லைத் தூக்கி முகத்தில் போட்டு விட்டு ஓடிவிட்டார்கள். நாங்கள் திரும்பி வந்து எங்களுடைய ஓனருக்கு மற்றும் மகனுக்கும் தகவல் தெரிவித்து கொலை நடந்துவிட்டதாக கூறினோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் போலிசார் ஒரு நாள் தேதி ஞாபகமில்லை மத்திய சிறைச்சாலை மதுரையில் வைத்து என்னையும், அழகுமலை என்பவரையும் எதிரிகளை அடையாளம் காட்டும்படி சொன்னார்கள். அப்போது அங்கு நீதித்துறை நடுவர் இருந்தார். அவர் முன்பாக எதிரிகளை அடையாளம் காண்பித்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்ததை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாணை**

சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக அழகுமலை என்பவர் வாழைநார்

உறித்துக் கொண்டிருந்தார் என்றும், அப்போது மூன்று நபர்கள் மாமரத்திற்கு அருகே மோட்டர் ரூம் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அழகுமலை என்பவர் என்னை அழைத்தார் என்றும் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நானும், அழகுமலை என்பவரும் மாமரத்திற்கு அருகிலுள்ள மோட்டார் ரூம் சென்று பார்க்கும் போது அடையாளம் தெரியவில்லை என்றும் எதிரிகள் ஒருவரை கத்தியை வைத்து குத்தி கல்லைத் தூக்கி முகத்தில் போட்டு விட்டு ஓடிவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நாங்கள் திரும்பி வந்து எங்களுடைய ஓனருக்கு மற்றும் மகனுக்கும் தகவல் தெரிவித்து கொலை நடந்துவிட்டதாக கூறினோம் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன். நான் சம்பவத்தன்று கல்யாணசுந்தரம் என்பவருடைய தோட்டத்திற்கு 4.30 மணியளவில் சென்றேன். சம்பவத்தன்று அழகுமலை கல்யாணசுந்தரம் தோட்டத்திற்கு காலை சுமார் 5.45 மணிக்கு வந்தார். அதை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனக்கு தோட்டத்திற்கு உள்ளேயே வீடு உள்ளது. சம்பவம் நடந்த தேதியன்று அழகுமலை வாழைநார் உறித்துக் கொண்டிருந்ததை நான் நேரடியாக பார்த்தேன். எதிரிகளை சம்பவத்திற்கு முன்னால் நான் பார்த்தது கிடையாது. எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையின் போது எதிரிகளின் பெயர்கள் எதையும் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை சுமார் மூன்று மாதங்கள் கழித்து விசாரணை செய்தார்கள். என்னுடைய வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னுடைய ஓனர் கல்யாணசுந்தரத்தின் மகன்கள் ரமணன், சரவணன் ஆகியோர்களுக்கு தகவல் கூறினேன். கல்யாணசுந்தரம் இறந்துவிட்டார். நான் போனில் கொலை நடந்த விபரத்தை ரமணனிடம் சொன்னேன். அவர் அவருடைய அண்ணன் சரவணனிடம் சொல்லிவிட்டார். நான் சம்பவத்தை ஐந்து நிமிடம் பார்த்தேன். அவ்வாறு பார்த்த பின்பு நான் எதுவும் சத்தம் போட்டு அந்த சத்தத்தை கேட்டு அ.சா.2 அழகுமலை வந்தாரா என்று கேட்டால் அ.சா.2 தான் மூன்று பேர்கள் உள்ளே இருக்கிறார்கள் என்று என்னை கூப்பிட்டார். நான் சென்றேன். போலிசார் என்னை ஒவ்வொரு தடவையும் விசாரிக்கும் போது நான் சொல்ல சொல்ல அங்கு வைத்தே எழுதிக் கொண்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது சம்பவத்திற்கு பின்பு சற்று தூரத்தில் நின்றவாறு சத்தம் போடவே பக்கத்தில்

வாழைநார் உறித்துக் கொண்டிருந்த அச்சம்பத்தை சேர்ந்த அழகுமலை என்பவர் ஓடிவந்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடைய ஓனர் மகன்களுக்கு கொலை நடந்ததாக போனில் குறிப்பாக சொன்னேன். எதிரிகளை காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் காண்பித்தும், புகைப்படங்கள் எடுத்து என்னிடம் காண்பித்ததால் தான் நான் சிறையில் வைத்து நீதித்துறை நடுவர் முன்பாக அடையாளம் காண்பித்தேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் பார்த்த மூன்று நபர்கள் நெட்டையானவர்களா, குட்டையானவர்களா, சிவத்தவர்களா, கருத்தவர்களா, குண்டானவர்களா, ஒல்லியானவர்களா என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் நான் காவல்நிலையத்திற்கு என்னுடைய ஓனருடன் செல்லவில்லை. நான் வைத்திருந்த கைபேசியானது என்னுடைய கைபேசி ஆகும். போலிஸ் விசாரணையின் போது என்னுடைய கைபேசி தொலைந்துவிட்டது. நான் சொல்வது போல் எதிரிகளை எப்போதும் கல்யாணசுந்தரம் தோட்டத்தில் நான் பார்க்கவில்லை என்றும், வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னையும், அழகுமலையையும் காவல்நிலையத்தில் வைத்து மிரட்டி நாங்கள் சொல்லும் ஆட்களை சிறையில் அடையாளம் காட்ட வில்லை என்றால் உங்களை சிறைக்கு அனுப்பிவிடுவோம் என்று காவல் துறையினர் மிரட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.